1970 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இன்னொரு விஷயம் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன். நிறம் மாறிய அரிசியைக் கொடுத்துவிட்டால், தரமுள்ள அரிசியை மில் காரர்கள் கொடுப்பார்கள் என்று தயவுசெய்து பொருள் கொள்ள வேண்டாம். அப்படிக் கொடுப்பது வாடிக்கையாகப் போய் விட்டது அவர்களுக்கு. தகராறு செய்து கொண்டு, பணத்தை அரசாங்கம் பிடித்து வைத்துக்கொள்கிறது. இதற்கு வழி அரசாங்கமே புதிய ரைஸ் மில்களை நடத்த வேண்டும். வேறு வழியே கிடையாது. அப்பொழுது ஸ்டேட் ட்ரேடிங் பூராவையும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். அது இப்பொழுது சாத்தியமில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** அரசாங்கத்தில் ஸ்டாக் இருக்கும் 28,000 டன் அரிசியையும், கெட்டுப் போகக் கூடிய நிலையில் இருப்பதால், துரிதமாகச் செலவு செய்ய, 1,000 கிராம் என்பதை 1,500 கிராம் என்று அளவை உயர்த்திச் சிக்கிரமாக இருப்பில் இருப்பதை வினியோகிக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நஷ்டம் இன்னொரு 5 கோடி வரும். நஷ்டத்தில் குறையாது. ஆனால், சென்னையிலும் கோயம்புத்தூரிலும், பெல்ட் எரியாவில், 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு என்கிற திட்டத்தின் கீழ் மொத்தம் செலவாகும் அளவு 15,000 டன். ஆகவே இரண்டு மாதத்தில் இது முடியலாம் என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, அரிசியாகக் கொடுப்பதால், ரைஸ் மில்காரர்கள் மோசமான அரிசியைக் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. நெல்லாகவே வினியோகம் செய்யக்கூடிய நிலையில் ஏற்பாடுகள் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மன்னிக்கவும், 1,000 கிராம் அரிசிக்குப் பதில் நெல் கொடுத்தால், எங்கே போய் குத்துவார்கள்.

### அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

* 687 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 1968-69-ம் ஆண்டில், சீனி மூட்டைகளின் அடைமானத்தின்பேரில் மதுரை கூட்டுறவு வங்கியில் பணம் பெறுவதில் ஒழுங்கீனம் நடைபெற்றதாகக் கண்டுபிடிக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இல்லை.**